1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அந்தத் தகவலை அறியலாம். வரலாற்றுத் துறையைப் பொறுத்தவரையில் அந்தக் குறைபாடு இல்லை என்பதைத்தான் சொன்னேன்.

Devikumari College, Kuzhithurai

* 814 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there are proposals to open new courses of studies at the Devikumari College at Kuzhithurai Municipality in Kanyakumari district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. தேவிகுமாரி கல்லூரியில் புதுவகுப்புகள் தொடங்கக்கோரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமோ அல்லது கல்லூரிக் கல்வி இயக்குநரிடமோ பரிசிலனையில் இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, குழித்துறை பக்கத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கு வேறு கல்லூரிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்கள் நாகர்கோவிலுக்குத்தான் போக வேண்டியிருக்கிறது. புதிதாக ஏகதேசம் 10 ஏக்கர் நிலங்கள் அந்தக் கல்லூரி கட்டடம் அமைப்பதற்காக டொனேட் செய்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இந்தக் கல்லூரியைமாற்றினால் இன்னும் அதிக வகுப்புகளை வைப்பதற்கு வசதியாக இருக்கும். அம்மாதிரி புதிய வகுப்புகளை வைக்கவும், கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி விண்ணப்பங்கள் வரவில்லை, அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் ஆராயலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தக் கல்லூரி சம்பந்தமாக இப்பொழுது ஒருசில சயன்ஸ் சப்ஜக்ட்ஸ், ஒருசில ஆர்ட்ஸ் சப்ஜக்ட்ஸ் இருக்கின்றன. பி.ஏ. போன்ற பட்டப் படிப்பிலே இன்னும் அதிகமாக மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு எல்லா சௌகரியங்களும் இருந்தும் அந்த இலாக்கா—தேவஸ்வம் இலாக்கா—நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இனிமேலாவது வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிக் கல்வி இயக்குநரிடத்திலோ அல்லது பல்கலைக் கழகத்தினிடத்திலோ அந்தக் கல்லூரி நிர்வாகத்தினரிடமிருந்து விண்ணப்பம் வரவில்லை. முறைப்படி அவர்களிடமிருந்து விண்ணப்பம் வந்தால் பல்கலைக் கழகமும் கல்லூரிக் கல்வி இயக்குநரும் ஆராய்வார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கல்குளம், விளவங்கோடு ஆகிய இரண்டு தாலுக்காக்களிலும் ஏகதேசம் எட்டு லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. இந்தக் கல்லூரியில்தான் பெண்கள் படிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது பெயரளவில் கல்லூரி என்று இருக்கிறதே தவிர பி.யூ.சி.க்குக்கூட 300 மாணவிகள்கூடச் சேர்க்கப்படுவதற்கான கட்டிட வசதி இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் தேவஸ்வம் போர்டோடு கலந்து கல்லூரியை விஸ்தரித்து எந்த அளவில் மாணவிகளைச் சேர்க்கத் தேவைப்படுகிறதோ அந்த அளவில் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கு அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர்தான் அந்த முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். இடவசதி, மற்றவைகளை அவர்கள் ஏற்படுத்தினால் பல்கலைக் கழகம் ஒரு கமிஷனை அமைத்து புது வகுப்புகளை, பட்டப் படிப்பிற்குத் தேவையான வகுப்புகளை அமைத்து தர இயலும். கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்தால் பல்கலைக் கழகம் அனுமதி வழங்க இயலும். எனவே கட்டிட வசதிகளுக்கு அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வேண்டுமென்றால் பல்கலைக் கழகம் அவர்களை இந்த இடத்தை விஸ்தீரணம் செய்ய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கேள்வியில் தேவிகுமாரி கல்லூரி என்று இருக்கிறதே, அது ஆண்டவன் பெயரா அல்லது தனிப்பட்ட நபரின் பெயரா? நிர்வாகத்தினர் யார் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டின் சார்பாக இந்தக் கல்லூரி நடைபெறுவதால் தேவி குமாரி கல்லூரி என்று வைத்திருக்கிறார்கள்.